போன்று ஒரு கோயிலும், வெள்ளியங்கிரி மலையில் இருக்கிறது. அந்த மலையில் பல ஏக்கரா நிலங்கள் வனத்துறைக்கு சொந்தமாக இருக்கின்றன. அங்கே, அந்தக் கோயிலுக்கு பொது வேலைக்காகத் தேவைப்படுகின்ற நிலம், இந்து சமய அறநிலையத் துறைக்கு மாற்றிக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமானப் பிரச்சினை. பல இடங்களில் வனத்துறை பகுதியிலே கோயில்கள் இருக்கின்றன. வெள்ளியங்கிரி மலை மீது அப்படிப்பட்ட ஒரு கோயில் இருப்பதைப் போல, மதுரையிலும் அழகர் கோவில் இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் காலத்திலே, இப்படிப்பட்ட கோயில்களுக்கு, தாராளமாக பட்டா செய்து கொடுத்திருந்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருச்செந்தூர் பகுதியிலே, குதிரைமேடு என்ற இடத்தில் 10 ஆயிரம் ஏக்கரா வனப்பகுதி இருக்கிறது. அப்போது அங்கிருந்த ஒரு வெள்ளைக்கார அதிகாரி, ஏதோ ஒரு இரவு ஒரு காட்சியைக் கண்டதாகவும் மறுநாளே 150 ஏக்கரா நிலத்தை அங்கே இருந்த கோயிலுக்கு பட்டா செய்து கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. அந்த 150 ஏக்கரா நிலம் இன்றைக்கும் வனத்துறையைச் சார்ந்த நிலமாக இருந்து கொண்டிருக்கிறது. இதுபோல், இன்றைக்கும் வனத்துறை தாராளமாக நடந்துகொள்ளுமென்று எதிர்பார்க்கிறேன்.

சந்தனத் தொழிற்சாலை

* 8172 திரு. எஸ். ஆர். சிவலிங்கம் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் நகரத்தை மையமாகக் கொண்டு சந்தன தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் நகரத்தை மையமாகக் கொண்டு சந்தனத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் நகரத்தைச் சுற்றி, ஏற்காடு, கொல்லிமலை, கல்வராயன்மலை ஆகிய பகுதிகளிலிருந்து நல்ல முதிர்ந்த சந்தன மரங்கள் சேலம் வன இலாகாவுக்குக் கொண்டு

வரப்படுகிறது. அங்கு அவைகளைச் சீராக்கி ஏலத்திற்கு வைக்கின்றனர். கேரளா, மைசூர், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் உள்ள தனியார்கள், குறைந்த ஏலத்திற்கு எடுத்து, நிறைந்த லாபத்தைச் சம்பாதிக்கின்றனர். எனவே, சேலத்தில் ஒரு சந்தனத் தொழிற்சாலை உருவாக்கினால், கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வரும்; மேலும், அதனால், எங்களது சேலம் மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, அரசு பரிசீலித்து, தொழிற்சாலையை அமைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அம்பேத்கார் மாவட்டம், தெற்குப்பேட்டையில் நிறுவப்பட்ட தொழிற்சாலை சந்தன எண்ணெய் தொழிற்சாலை இன்னும் மூடிக் கிடக்கிறது. அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். உற்பத்தி செய்யப்படுகின்ற எண்ணெயினுடைய விலை சற்றுக் குறைவாக இருக்கிற காரணத்தினால், இதை லாபகரமாக ஓட்ட முடியுமா என்று ஒரு கேள்வி எழுந்தது. பல்வேறு வெளிநாடுகளிலே இருக்கக்கூடிய கம்பெனிகளோடு தொடர்பு கொண்டு இப்போது அதற்கு நல்ல விலையைப் பெற்றுத் தரமுடியுமென்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, முதலிலே அம்பேத்கார் மாவட்டத்தில் இருக்கக்கூடிய தெற்குப்பேட்டை தொழிற்சாலையை லாபகரமாக ஓட்ட வேண்டும்; அதற்குப் பிறகு, சேலம் தொழிற்சாலையைப் பற்றி கவனிக்கலாம்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள தொழிற்சாலையைத் திறந்தவுடன், அரசு அவசரமாகப் பரிசீலித்து, எங்களுடைய சேலம் மாவட்டத்தினுடைய பொதுமக்கள் நலன் கருதியும், அதே நேரத்தில் எங்களுடைய மாவட்டத்தில் விளைகின்ற சந்தன மரங்களைக் காப்பாற்றும் வகையிலேயும் அடுத்த ஆண்டிலாவது கூட்டுறவுத் துறையின் மூலமாக சந்தன தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்

9.20 மணி.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, தெற்குப்பேட்டை தொழிற்சாலை முதலிலே திறந்து நடத்தப்படட்டும். பிறகு அது வனத்துறையிலா அல்லது கூட்டுறவுத் துறையிலா என்பதை சேலம் தொழிற்சாலையை நாம் தொடங்க நினைக்கின்றபோது முடிவு செய்யலாம்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை அரசு சந்தனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. எத்தனை தனியார் சந்தனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னது போல் இங்கே அம்பேத்கார், மாவட்டத்திலே தெற்குப்பேட்டை என்ற அந்த இடத்திலே மட்டும்தான் அரசுத்துறையிலே சந்தனத் தொழிற்சாலை வைக்க பட்டிருக்கின்றது. தனியார் தொழிற்சாலை ஆங்காங்கே வைக்கப்பட்டு நடத்தப்பட்டாலும் கூட இன்றைக்கு எங்கேயும் அது லாபகரமாக நடந்து கொண்டிருக்கக்கூடிய தொழிற்சாலை யாக இருப்பதாகத் தெரியவில்லை.

பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைத்தல்

* *3968* டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புகைவண்டி நிலையங்களில் இருப்பதுபோன்று மாநகராட்சி, நகராட்சி பேருந்து நிலையங்களில் டி. வி. வைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளின் பேருந்து நிலை யங்களில் மாநகராட்சிகளின் சட்ட விதிகளுக்குட்பட்டு தொலைக் காட்சிப் பெட்டிகள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது. சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்துப் பேருந்து நிலையங்களையும் அரசு சார்ந்த போக்குவரத்துக் கழகங்கள் பராமரிக்கின்றன. எனவே சென்னை, மாநகராட்சியால் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டி அமைக்கும் பொருள் எழவில்லை.

நகராட்சிப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி பேருந்து நிலையங்களில் பயணி கள் மணிக்கணக்காக பிரயாணம் செய்யும்போது காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அவ்வாறு காத்திருக்கும் பிர யாணிகள் பொழுதுபோக்கிற்காவது டி.வி. பெட்டி வைப்பது நல்ல கருத்து என்பதை யாரும் மறுக்க முடியாது. புகைவண்டி நிலையம், மாநகராட்சி பேருந்து நிலையங்களில் இருப்பதுபோல், நகராட்சி பேருந்து நிலையங்களிலும் டி.வி. பெட்டி வைக்க துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.